**இலங்கை றக்பி - 2019**

---

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை றக்பியின் (''இலங்கை றக்பி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இலங்கை றக்பியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வின் நோக்கெல்லை பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை றக்பி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை றக்பியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை றக்பியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை றக்பியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு இலங்கை றக்பி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க இலங்கை றக்பியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் சர்வதேச றக்பி போட்டிகளில் தேசிய பாடசாலை குழுக்கள் பங்குபற்றியதற்காக இலங்கை றக்பியால் ரூபா 17,492,313 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அத் தொகை இலங்கை பாடசாலைகள் றக்பி கால்ப்பந்தாட்ட சங்கத்திடமிருந்து பெறவேண்டியவையாக காட்டப்பட்டிருந்தது. மேற்படி மீதியின் அறவீட்டுத் தன்மை முழுமையாக சந்தேகத்திற்கிடமாக உள்ள போதிலும் அது தொடர்பாக ஏற்பாடொன்று நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதியாண்டில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பெற வேண்டியவைகள் | 573,550 | மீதி உறுதிப்படுத்தல்கள் (அ, ஆ) | எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டியவைகள் | 14,202,445 | | | |
| (இ) | ஏனைய முற்பணங்கள் | 133,408 | பட்டியல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள ரூபா 133,408 தொகையான பெறவேண்டிய மீதி மற்றும் 04 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள ரூபா 5,441 தொகையான வேறொரு மீதி என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிறைவேற்று சபையின் அங்கீகாரம் மீது அறவிடப்படாத மீதிகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்ட ரூபா 3,261,885 கூட்டுத்தொகையான 05 செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் 02 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்த ரூபா 8,707,829 தொகையான 18 செலுத்த வேண்டிய மீதிகள் என்பவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு மேலும் பொறுப்பற்ற மீதிகள் காணப்பட்டால் அத்தகைய மீதிகளை வருமானமாக பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 இன் 1 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க பிரமாணங்களின் 7(xii) ஆம் பிரிவு | ஆண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் அங்கீகாரத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதியாண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய விளையாட்டுச் சங்க பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவு | 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் பெறுகை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

இலங்கை றக்பியின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,860,940 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 28,672,002 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 23,811,062 தொகையான முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் ரூபா 11,049,549 ஆல் அதிகரித்தமையே இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் 0.68 சதவீதத்திலிருந்து 0.57 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது. அதற்கிணங்க இலங்கை றக்பியின் குறுங்காலப் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்யும் சாத்தியத்தன்மை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை றக்பி அரசியலமைப்பின் 14.1(ஓ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகள் றக்பி கால்ப்பந்தாட்டச் சங்கம், இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கம், இலங்கை றக்பி கால்பந்தாட்ட நடுவர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் மாகாண றக்பி கால்ப்பந்தாட்ட கழகங்கள் உள்ளடக்கிய இலங்கை றக்பி உறுப்பினர்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் 45 நாட்களினுள் பட்டயக் கணக்காளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அலுவலகப் பொறுப்பாளர்கள் மற்றும் ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலகத்தினதும் குழு உறுப்பினர்களின் சுயவிபரக் கோவை, உரிய வருடாந்த பொதுக் கூட்டத்தின் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டக் குறிப்பு பிரதி மற்றும் வரவுச் சான்றிதழ், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் சான்றுறுதிப்படுத்திய பிரதி மற்றும் அத்தகைய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அவர்களது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்பற்றப்பட்டிருந்ததை | 2020 ஆம் ஆண்டில் இதனை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை றக்பி அரசியலமைப்பின் பிரகாரம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்துவதற்கு அவர்களது உறுப்பினர் பட்டியல், இலங்கை றக்பி வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னரான விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய நிகழச்சித்திட்டங்களின் விபரங்கள் உள்ளடக்கிய ஏனைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் இலங்கை றக்பி இத் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | அடுத்த ஐந்து ஆண்டுகளிற்கு இலங்கை றக்பியின் தந்திரோபாய திட்டமொன்றினை தயாரிப்பதற்கு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 770,000 தொகையை இலங்கை றக்பி பெற்றிருந்தது. திட்டத்தை தயாரிப்பதற்காக ரூபா 816,326 கிரயத்தில் தனியார் கம்பனியொன்றை இலங்கை றக்பி தெரிவு செய்திருந்ததுடன் ரூபா 385,000 தொகை முற்பணங்களாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2020 யூலை வரை திட்டம் பெறப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் இதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தந்திரோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 6,333,533 கிரயமான நிலையான சொத்துக்களின் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதியாண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்து மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |